**கெஸ்பேவ நகர சபை**
**கொழும்பு மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்பித்தல்

2016 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் 2016 மாரச் 23 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 30 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டினது கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கை 2016 ஒக்டோபர் 20 ஆந் திகதியன்று நகர சபைச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுமிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து புத்தளம் நகர சபையின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் காணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

(அ) வீதிகளைப் பழுதுபார்த்தமைக்காகக் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 1,261,592 நூலகப் புத்தகங்களது பெறுமதியாகிய ரூபா 266,564 தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களது பெறுமதியாகிய ரூபா 201,000, அறவிடப்படக்கூடிய பொது வசதிகளுகாகன கட்டணமாகிய ரூபா 51,667 என்பன கணக்குகளில் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) பெற வேண்டிய வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டண வருவாயாகிய ரூபா 141,500 மற்றும் இயந்திர சாதனங்களது பெறுமதியாகிய ரூபா 120,000 என்பன கணக்குகளில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

#### 1.3.2 எதிர்பாராப் பொறுப்புகள்

1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் பிரகாரம் குறிப்பிட்டவாறு பங்களிப்புத் தொகையைச் செலுத்தாததால் உருவாகிய ரூபா 935,413 தண்டப் பணம் மற்றும் மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு கெஸ்பேவ நகர சபைக்கு எதிராகத் தீர்த்து வைக்கப்படாதிருக்கும் 09 வழக்குகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

#### 1.3.3 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக் கூற்றுக்களில் 13 கணக்கீட்டு விடயங்கள் தொடர்பாக ரூபா.5,623,987 அதிகரித்தும் ரூபா.31,480,460 குறைத்தும் காட்டப்பட்டிருந்தன.

#### 1.3.4 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது வசதிகள் நிலையத்திடமிருந்தும் காலை நேரச் சந்தையிலிருந்தும் அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவையாகிய ரூபா 92,269 அறவிடப்பட்டிருக்கவில்லை. 19 முதல் 28 ஆண்டுகள் பழமை வாய்ந்த வினோத வரியாகிய

ரூபா 281,047 2009 முதல் 2014 வரையான காலப்பகுதிக்குரிய மீதி மின் வெளிச்ச உதவி தொகை மீதியாகிய ரூபா 481,578, ஓராண்டிற்கு மேற்பட்ட பழமை வாய்ந்த நானாவித கடன்கொடுத்தோர் மீதியாகிய ரூபா 15,327,222, 2016 ஆம் ஆண்டிற்கு முன்னரான மாகாண சபைக் கடன் கொடுத்தோர் மீதியாகிய 15,856,916 என்பன பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகளில் உள்ளடங்கியிருந்தன.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான எழுத்து மூலச் சான்றுகளைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமையால் 08 கணக்கீட்டு விடயங்களது மீதியாகிய ரூபா 583,016,062 கூட்டுத் தொகையினது பிழையற்ற தன்மையை உறுதி செய்ய முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்வற்றுடன் இணங்காமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| நி.பி 104 (2) | 2016 யூன் 28 ஆந் திகதியன்று கெப் வண்டி விபத்துக்குள்ளானமை சம்பந்தமாகத் தொடர்புடைய அதிகாரிகளுக்கு அறிவிக்கப்படவில்லை. |
| நி.பி 110 | நகர சபையில் ஏற்படும் இழப்புகளையும் நட்டங்களையும் பதிவு செய்வதற்கான இழப்பு மற்றும் நட்டப் பதிவேடு ஒன்று பேணப்படவில்லை. |
| நி.பி 133 (1) மற்றும் (2) | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப்படவில்லை. |
| நி.பி 188(2) | 2010 டிசெம்பர் 31 ஆந் திகதியன்று வைப்பிலிடப்பட்ட ரூபா 3,386 பெறுமதியான காசோலை மற்றும் 2012 டிசெம்பர் 18 ஆந் திகதிய ரூபா 1,714 பெறுமதியான 03 காசுக் கட்டளைகள் மற்றும் ரூபா 1,492 பெறுமதியான கொடுப்பனவு மறுக்கப்பட்ட காசோலைகள் சம்பந்தமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. |
| நி.பி 200(4) | கொடுப்பனவுகளைச் சான்றுறுதிப்படுத்திய உத்தியோகத்தர் 04 கொடுப்பனவு உறுதிச்சான்றுகளுக்குரிய ரூபா 642,992 சம்பந்தமாகக் கைச்சாத்திட்டிருக்கவில்லை. |
| நி.பி 225 | சரியான மாதிரிப் படிவத்தில் அல்லாது தவறான மாதிரிப் படிவத்தில் ரூபா 1,203,500 பெறுமதியான 4 கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் அமைந்திருந்தன. |
| நி.பி 226 | கொடுப்பனவிற்கான அதிகாரத்தைக் குறிப்பிடாது 12 கொடுப்பனவு உறுதிச் சான்றுகளுக்குரிய ரூபா 9,056,260 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| நி.பி 371(2) | பெறப்பட்ட முற்பணம் குறித்த பணி முடிவுற்றதுமே தீர்த்து வைக்கப்பட வேண்டுமொயினும், அநேக ஆண்டுகளாக நிலவி வரும் ரூபா 353,026 முற்பணத்தை மீளாய்வாண்டு முடிவிலேனும் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| நி.பி 571 | மீளாய்வாண்டு முடிவிலிருந்த திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்பு மீதியாகிய ரூபா 30,998,512 மீதியில் இருந்த 02 ஆண்டுகளைக் கடந்த ரூபா 6,595,637 தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படாதிருந்தது. |
| நி.பி 756 | நிதிக் கூற்றுக்களில் சுட்டிக்காட்டப்பட்ட ரூபா 253,880,013 பெறுமதியான நிலையான சொத்துக்கள் ஆண்டின் இறுதியில் சரி, பிழை பார்க்கப்பட்டிருக்கவில்லை. |
| நி.பி 1645(இ) | சபையின் சில வாகனங்களுக்குரிய நாளாந்த ஓட்ட அட்டவணைகள் பூரணப்படுத்தப்படாதிருந்தன. |
| நி.பி 1646 | நாளாந்த ஓட்ட அட்டவணையும் அதற்குரிய மாதாந்தப் பொழிப்பும் அடுத்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்தன. |
| நி.பி 1653 | சபைக்குரிய 14 வாகனங்களது தூர மானிகள் 07 ஆண்டுகளுக்கு மேலாக பழுது பார்க்கப்படாதிருந்தன. |
| (ஆ) 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | சபைக்குரிய வாகனங்களது எரிபொருள் நுகர்வு பரிசீலிக்கப்படவில்லை. |
| (இ) 2008 சனவரி 25 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியின் ‘‘இ’’ பகுதி | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தைப் பெற வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான வருடாந்த மெய்மையாய்வு அறிக்கை தயாரிக்கப்படவில்லை. |
| (ஈ) 2014 சனவரி 09 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரது (மேல் மாகாணம்) LGD/7/7/1/DI - 2013 ஆம் இலக்க கடிதம் | சபையில் பணி புரிபவர் 60 வயதைக் கடந்தவராக இருத்தலாகாதெனினும், 60 வயதுக்கு மேற்பட்ட 04 ஊழியர்கள் 2016 யூலை 31 வரை ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றியமைக்கு ரூபா 2,309,177 சம்பளமாக வழங்கப்பட்டிருந்தது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டினை நகர சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 57,026,425 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 103,195,690 ஆகும்.

## 2.2 வருவாய் நிர்வாகம்

### 2.2.1 வருவாய்ச் சேகரிப்பிலான செயலாற்றல்

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமெனச் செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட உள்ளவாறான வருவாய் மற்றும் வருவாய் நிலுவை தொடர்பான தகவல்களின் பொழிப்பு கீழே காணப்படுகின்றது.

| | 2016 | | | | 2015 | |
|---|---|---|---|---|---|---|
| வருவாய் விடயம் | உள்ளவாறு அறவிடப்பட வேண்டியது | உள்ளவாறு அறவிடப்பட்டது | ஆண்டின் நிலுவை | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | உள்ளவாறு அறவிடப்பட வேண்டியது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | **ரூபா.000** | **ரூபா.000** | **ரூபா.000** | **ரூபா.000** | **ரூபா.000** | **ரூபா.000** |
| தீர்வையும் வரியும் | 35,000 | 26,953 | 8,047 | 21,369 | 41,207 | 27,175 |
| குத்தகை வாடகை | 6,924 | 5,894 | 1,029 | 1,637 | 12,610 | 2,937 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,200 | 1,413 | - | 70 | 6,150 | 1,150 |
| ஏனைய வருவாய் | 189,302 | 203,215 | - | 279,128 | 218,303 | 275,212 |
| | **232,426** | **237,475** | **9076** | **302,204** | **278,270** | **306,474** |

### 2.2.2 தீர்வையும் வரியும்

மீளாய்வாண்டிற்கெனப் பட்டியலிடப்பட்ட தீர்வை வரி வருவாய் ரூபா 35,000,000 ஆகும். இதில் 25.27 சதவீதமான ரூபா 8,844,905 ஐ அறவிடுவதற்கு ஆண்டின்போது சபை தவறியிருந்தது. 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய தீர்வை வரி நிலுவை ரூபா 26,749,745 ஆகும். இதில் மீளாய்வாண்டின்போது 50.19 சதவீதமான ரூபா 13,427,206 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

### 2.2.3 கடை வாடகை

சபைக்குச் சொந்தமான 104 கடைகளிலிருந்து 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,637,783 நிலுவை இருந்தது. இதில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்த கடை வாடகையான ரூபா 455,415 உள்ளடங்கியிருந்தது.

### 2.2.4 வர்த்தக அனுமதிப் பத்திரம்

மீளாய்வாண்டில் 1,412 விற்பனைக் கூட்டங்களுக்கு வர்த்தக அனுமதிப் பத்திரங்களை வழங்க வேண்டியிருந்தது. இவற்றுள் 1,213 விற்பனைக் கூட்டங்களுக்கான வர்த்தக அனுமதிப் பத்திரக் கட்டணம் அறவிடபட்டிருந்தது. எவ்வாறாயினும், குறித்த அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படவில்லை. மீளாய்வாண்டின் முடிவில் உள்ளாவறான பெற வேண்டிய மீது ரூபா 141,500 ஆகும். இதில் ரூபா 136,500 முன்னைய ஆண்டிற்கெனப் பெறப்பட வேண்டிய அனுமதிப் பத்திரக் கட்டணமும் உள்ளடங்கியிருந்தது. 2016 சனவரி 01 ஆந் திகதியன்று பெற வேண்டிய நிலுவை ரூபா 113,575 ஆகும். இதில் மீளாய்வாண்டின்போது 38.6 சதவீதமான ரூபா 43,830 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் விடயங்களை அவதானிக்கப்படுகின்றன.

(அ) ஊழியர்களது பிணைப் பணமாகிய ரூபா.82,500 மீளாய்வாண்டு இறுதியிலும் முதலீடு செய்யப்படாதிருந்தமையால் அம் முதலீட்டினாலான வருவாயைச் சபை இழந்திருந்தது.

(ஆ) நகர சபையானது அபிவிருத்தி அதிகாரசபையுடன் சேர்ந்து நடாத்திய நடைமுறைக் கணக்கின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 16,901,660 ஆகும். நெடுங்காலமாக இது செயற்பாடு எதுவுமின்றியிருந்தது.

(இ) நகர சபை கழிவுப் பொருள் பெரல்களைக் கொள்வனவு செய்வதற்கென நடாத்திய நடைமுறைக் கணக்கில் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறிருந்த ரூபா 607,445 மீதியானது 2009 ஆம் ஆண்டு தொடக்கம் பயனற்றிருந்தது.

(ஈ) 2009 ஆம் ஆண்டு முதல் சபையால் பேணப்பட்டவாறிருக்கும் சேமிப்புக் கணக்கொன்றில் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு இருந்த மீதி ரூபா 5,859,262 ஆகும். அதனை நிலையான வைப்பொன்றிலிடுவதற்குக் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) வருவாயை ஈட்டியவாறிருந்த சபையின் பழைய வாடி வீடு ஒன்று தகர்க்கப்பட்டு அதற்குப் பதிலாக ரூபா 52,929,240 மதிப்பீட்டில் புதிய கட்டிடம் ஒன்றினது முதலாம் கட்ட வேலை நிறைவேறி 2014 டிசெம்பர் 04 ஆந் திகதி அது சபையிடம் கையளிக்கப்பட்டுமிருந்தது. வாடி வீட்டின் மூலம் மீளாய்வாண்டில் ரூபா 3,000,000 வருவாய் எதிர்பார்க்கபட்டிருந்தபோதும், 2016 யூன் 16 ஆந் திகதியளவிலும் இக்கட்டிடத்தின் மூலம் வருவாய் எதுவுமே பெறப்படாது அது ஆக்கப்பூர்வமான பணி எதற்கும் பயன்படுத்தப்படாதிருந்தது.

### 3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

(அ) நகர சபையின் தீர்வை வரி வருவாயை முகாமைத்துவமிடுவதற்கென 2007 ஆம் ஆண்டின்போது தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டு நிறுவப்பட்டிருந்த கணனி மென் அணி முறைமையின் மூலம் தீர்வை வரிப் பிரிவினது நாளதுவரையாக்கப்பட்ட தகவல்கள் எதுவும் ஒருங்கிணைக்கப்பட்டோ அல்லது அதன் பொழிப்பைப் பெறுவதற்கோ முடியாதிருந்ததுடன் முறைமையில் நிலவிய பல்வேறு குறைபாடுகளைச் சீராக்குவதற்கு நகரசபை நடவடிக்கை மேற்கொள்ளாதுமிருந்தது. அவ்வாறே, கணனி மயப்படுத்தப்பட்ட தகவல்கள் கண்கானிப்புள்ளாகாதும் தரவுகள் பாதுகாக்கப்படுவதற்கான நடவடிக்கைகளும் இருக்கவில்லை.

(ஆ) பட்டகெத்தர மயானம், 9 ஆம் ஒழுங்கையிலுள்ள நுழைவாயிலில் உள்ள மின் கம்பத்துடன் இணைந்த காணியை அத்துமீறிக் கைப்பற்றியமை மற்றும் அக் காணிக்கான உரித்துச் சான்றிதழை வழங்குதல் என்பன தொடர்பாக 2016 ஒக்டோபர் 24 ஆம் திகதி கலந்துரையாடப்பட்டு அதன் பிரகாரம் வீதி எவ்வாறு திசை திருப்பப்படலாம் என்பதற்கு நகரசபை மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் 2017 யூன் 16 ஆந் திகதியளவிலும் நிறைவேறாதிருந்தது.

(இ) வெளி நபர்களால் 2011 ஒக்டோபர் 06 ஆந் திகதியன்று சபைக்கெதிராகத் தொடுக்கப்பட்ட 2483 ஆம் இலக்க வழக்கின் மூலம் கோரப்பட்டிருந்த தொகை ரூபா. 350,000 ஆகியபோதும், மீளாய்வாண்டு முடிவில் வழக்குக்காகச் சபை செலவழித்திருந்த தொகை ரூபா. 457,750 ஆகும்.

(ஈ) வீதி விளக்குகள் தொடர்பாகப் பதிவேடு ஒன்றைச் சபை பேணியிருக்கவில்லை

**3.3 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயபன்படுத்தப்பட்டதுமான சொத்துக்கள்**

இரண்டு முதல் 05 ஆண்டுகளாக ரூபா 2,256,000 பெறுமதியுடைய 04 வாகனங்களும் அதிக ஆற்றலுடைய கொங்கிரீட் கலவை இயந்திரம் ஒன்று 05 ஆண்டுகளாகவும் பயன்படுத்தப்படாதிருந்தன.

**3.4 இனங்காணப்பட்ட இழப்புகள்**

பிலியந்தலை பொது சன நூலகத்திலிருந்து வெளிவாரி வாசகர்கள் 2008 முதல் 2014 வரையான காலப்பகுதியின்போது எடுத்துச் சென்று திருப்பி வழங்காதுபோன ரூபா 61,982 பெறுமதியான புத்தகங்கள் மற்றும் அங்கத்தவர்கள் தொலைத்திருந்த ரூபா 10,597 பெறுமதியான புத்தகங்களது பெறுமதியையும் அறவிடுவதற்கு மீளாய்வாண்டு இறுதியளவிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.5 ஒப்பந்த நிர்வாகம்**

மீளாய்வாண்டின்போது செயற்படுத்தப்பட வேண்டிய 06 அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்கு ரூபா.6,677,563 மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெறப்பட வேண்டியிருந்தது. மீளாய்வாண்டு முடிவளவிலும் ரூபா.3,290,966 பெறுமதியான செயற்திட்டங்களுக்கு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிராததுடன் 04 செயற்திட்டங்களது வேலை ஆரம்பிக்கப்படவுமில்லை.

**3.6 பதவியணி நிர்வாகம்**

2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி தொடர்பான விபரம் வருமாறு.

| தரம் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளவாறான பதவியணி |
|---|---|---|
| சிரேஷ்ட | 04 | 03 |
| மூன்றாம் நிலை | 02 | 02 |
| இரண்டாம் நிலை | 61 | 62 |
| ஆரம்ப நிலை | 141 | 122 |
| | 208 | 189 |

(அ) மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை பதவிகளில் மீளாய்வாண்டினது இறுதியில் 42 அங்கீகரிக்கப்பட்ட பதவியணி இருக்கவேண்டியபோதும், நிரந்தர பதவியணியினரின் எண்ணிக்கை 46 ஆகவிருந்தது.

(ஆ) சபையின் மாநகர செயலாளர் பதவிக்கு மூன்றாம் நிலை தரத்திலான நிர்வாக உத்தியோகத்தர் ஒருவர் பதில் கடமையாற்ற நியமிக்கப்பட்டிருந்தார். கணக்காய்வாளர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஓய்வு பெற்ற கணக்காளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

(இ) வெற்றிடங்கள் நிலவிய இப்பதவிகள் அடங்கலாக நிரந்தர பதவியணியின் 14 பதவிகளுக்கும் 24 ஊழியர் வெற்றிடங்களுக்கும் ஆட்சேர்ப்பை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மீளாய்வாண்டின்போது மேற்கொள்ளப்படவில்லை.

(ஈ) 2014 நவம்பர் 12 ஆம் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் சலுகை அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த 48 ஊழியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. எனினும், இப்பதவிகளையும் உள்ளடக்கியவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியானது மீளாய்வாண்டின் இறுதியளவிலும் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மேற்படி (ஈ) இன் பிரகாரம் ஆட்சேர்க்கப்பட்ட 48 பேரின் பொருட்டு 2015, 2016 ஆம் ஆண்டுகளின்போது சம்பளமாக வழங்கப்பட்ட ரூபா 32,916,249 மீளளிப்பு செய்யப்படுவதற்கு சபையால் இயலாது போனது.

(ஊ) அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர ஊழியர்களுக்குப் புறம்பாக, சபையின் செயற்திட்டங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் 23 பேர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு சபையின் நிதியிலிருந்து மீளாய்வாண்டின்போது சம்பளமும் படியுமாக ரூபா 5,701,472 வழங்கப்பட்டிருந்தது.

## 3.7 வாகனப் பாவனை

(அ) வெளி நிறுவனம் ஒன்றினது பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த ரூபா 2,732,000 பெறுமதியான 3 வாகனங்களைச் சபையின் பெயரில் பதிவு செய்துகொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) வாகனக் குழாமில் உள்ள ரூபா 1,834,000 பெறுமதியான 06 வாகனங்கள் மீளாய்வாண்டின் இறுதியில் நிலையான சொத்துப் பதிவேட்டில் சேர்த்துக் கொள்ளப்படாதிருந்தன.

(இ) நாளாந்த ஓட்ட அட்டவணைகள் சம்பந்தமாக தயாரிக்கப்பட வேண்டிய மாதாந்த பொழிப்பு தயாரிக்கப்படவில்லை.

(ஈ) சபைக்குச் சொந்தமான ரூபா 249,000 பெறுமதியான பயன்படுத்தப்பட்டவாறிருக்கும் ஒரு டிறக்டர் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத 15 டிறக்டர்கள் என்பன சபையின் நிலையான சொத்துப் பதிவேட்டிலும் வாகன நிரலிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.8 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மூன்று பொதுசன சுகாதாரப் பரிசோதகர்கள் உட்பட 109 பேரை உள்ளடக்கிய பதவியணியினர் கழிவுப் பொருள் முகாமைத்துவப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மீளாய்வாண்டின் போதிலான கழிவுப் பொருள் முகாமைத்துவச் செலவினம் ரூபா 81,304,068 ஆகும். எவ்வாறாயினும், கழிவுப் பொருள் வரி மூலமான வருவாய் ரூபா 4,346,049 ஆகியமையால் கழிவுப் பொருள் வரி மூலமான வருவாயின் மூலம் ஈடுசெய்யப்பட்ட செலவினம் 5.34 சதவீதமாக குறைந்த மட்டத்திலிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின்போது கரதியான கழிவுப் பொருள் பிரிவில் ஒதுக்கப்பட்ட 3,128 தொன் கழிவுப் பொருட்கள் மற்றும் கலவையாக அமைந்த 16,238 தொன் கழிவுப் பொருட்கள் என்பன சபையால் அப்புறப்படுத்தப்பட்டிருந்தன. மொத்தக் கழிவுப் பொருட்களில் கலவையாக அமைந்த கழிவுப் பொருட்கள் 84 சதவீதமாகும்.

(இ) சபையின் அதிகாரத்துக்குட்பட்ட ஒட்டுமொத்தப் பிரதேசத்தில் 20 சதவீத சுற்றளவில் கழிவுப் பொருள் முகாமைத்துவத்தைச் செயற்படுத்துவதற்கு மீளாய்வாண்டின் இறுதியளவிலும் சபை தவறியிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய கழிவுப் பொருள் கட்டணம் ரூபா 1,903,443 ஆகும்.

(உ) கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபையால் மீளாய்வாண்டின்போது 1050 கழிவுப் பொருட்களுக்கான பைகள் பெறப்பட்டிருந்தும் 2016 நவெம்பர் 11 ஆந் திகதியன்று தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து ரூபா 391,208 கொடுப்பனவு செய்யப்பட்டு 1200 பைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. நன்கொடையாகப் பெறப்பட்ட 1050 பைகளும் 2017 சனவரி 20 ஆந் திகதியன்று விநியோகிக்கப்பட்டிருந்தன. கொள்வனவு செய்யப்பட்ட 1200 பைகளில் எதுவுமே 2017 யூன் 15 ஆந் திகதியளவிலும் விநியோகிக்கப்படுவதற்கான நடவடிக்கையின்றி இருந்தன.

(ஊ) இந்நகரசபை உட்பட 07 உள்ளூராட்சி நிறுவனங்கள் கழிவுப் பொருட்களை அகற்றியவாறிருக்கும் கரதியான கழிவுப் பொருள் பிரிவு அமைந்துள்ள காணியில் ஏறக்குறைய 80 சதவீதம் கெஸ்பேவ நகர சபைப் பிரதேசத்திற்குரியதாகும். ஆகவே, சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் வசிப்பவர்கள் எதிர்காலத்தில் சீரற்ற சுகாதாரப் பிரச்சினைகளுக்கு ஆளாகும் அபாயம் ஏற்படலாம்.

### 3.9 டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம்

டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு 2016 ஆம் ஆண்டின்போது கெஸ்பேவ நகர சபையால் ரூபா.1,071,117 செலவழிக்கப்பட்டிருந்தது. சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் முன்னைய ஆண்டில் 416 ஆகலிருந்த டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை மீளாய்வாண்டில் 686 ஆக உயர்ந்திருந்தது. முன்னைய ஆண்டில் மரணம் எதுவும் அறிவிக்கப்பட்டிராதபோதும், மீளாய்வாண்டின்போது 02 மரணங்கள் அறிவிக்கப்பட்டிருந்தன. டெங்கு ஒழிப்புக்கான செயற்திட்டங்களது எண்ணிக்கை, பரீசிலிக்கப்பட்ட இடங்களது எண்ணிக்கை, வழங்கப்பட்ட சிவப்பு அறிவித்தல்களின் எண்ணிக்கை, தொடரப்பட்ட வழக்குகள் என்பன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் மீளாய்வாண்டின்போது அதிகரித்திருந்தபோதும், இனங்காணப்பட்ட நுளம்புகள் பெருகக் கூடிய இடங்களது எண்ணிக்கை டெங்கு வீடுகளுடனான இடங்களது எண்ணிக்கை என்பன அதிகரித்திருந்தன. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் டெங்கு நோய் பெருகுவதைத் தவிர்ப்பதற்கும் நோயாளிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கும் மீளாய்வாண்டின்போது அமுலாக்கப்பட்ட டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம் வெற்றியளிக்கவில்லை.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

(அ) மதிப்பீடு செய்யப்பட்ட வருவாய் இலக்கை அடைய முடியாத 07 வருவாய்க்கான விடயங்களில் எதிர்பார்க்கப்பட்ட வருவாய் ரூபா 4,200,000 ஆகியபோதும், உள்ளவாறான வருவாய் ரூபா 1,756,611 ஆகவிருந்தது.

(ஆ) செலவின விடயங்களுக்கிடையே நிதியேற்பாடு மாற்றஞ் செய்யப்பட்டதையடுத்து மொத்த பாதீட்டு நிதியேற்பாடும் பூச்சியமாகிய 06 செலவின விடயங்களில் ரூபா 473,112 செலவு ஏற்பட்டிருந்ததால் பாதீடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டை விட செலவினம் ரூபா 473,112 அதிகரித்திருந்தது.

(இ) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியை செலவின விடயங்களுக்கிடையே மாற்றஞ்செய்ததையடுத்து 32 செலவின விடயங்களது மொத்தப் பாதீட்டு நிதியேற்பாடு ரூபா 94,434,000 ஆகியபோதும், மீளாய்வாண்டில் செலவான தொகை ரூபா 129,574,018 ஆகியமையால் மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டை விட ரூபா 35,140,018 அதிகமாகச் செலவழிக்கப்பட்டிருந்தது.

(ஈ) பத்துச் செலவின விடயங்களது பாதீடு செய்யப்பட்ட நிதியேற்பாடு ரூபா 711,000 ஆகும். எவ்வாறாயினும், நிதியேற்பாட்டு வரம்பிலும் கூடுதலாக அச்செலவின விடயங்களுக்குரிய ரூபா 2,735,000 நிதியேற்பாடானது வேறு செலவின

விடயங்களுக்கு அசாதாரணமாக மாற்றஞ்செய்யப்பட்டிருந்தது. அப் பத்துச் செலவின விடயங்களில் 07 இன் பொருட்டு ரூபா 306,378 செலவு செய்யப்பட்டிருந்தமையால் நிதியேற்பாட்டிற்கு அதிகமாக ரூபா 2,331,078 செலவாகியிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுபாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) வருவாய் நிர்வாகம்
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(உ) நிலையான சொத்துக்கள் மற்றும் கையிருப்பு நிர்வாகம்
(ஊ) பதவியணியினர் முகாமைத்துவம்
(எ) கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஏ) உள்ளகக் கணக்காய்வு